பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
24 09 2026 THURSDAY 6.45 AM

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- மத்திய அமைச்சகங்களின் சார்பில் நிறைவேற்றப்பட்டுள்ள மற்றும் எதிர்கால பணிகள் குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி, அமைச்சர்களுடன் இன்று ஆய்வு மேற்கொள்கிறார்.
- வாடிக்கையாளர்களின் வசதிக்காக வரும் 27-ம் தேதி ஞாயிறு அன்று வங்கிகள் செயல்படும் என்று மத்திய நிதியமைச்சகம் அறிவித்துள்ளது.
- சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்ட திட்டங்களை விரைந்து செயல்படுத்த வேண்டும் என்று சட்டப்பேரவை தலைவர் திரு ஜே.சி.டி. பிரபாகர் அறிவுறுத்தியுள்ளார்.
- தமிழகத்தில் சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு உள்ளிட்ட மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- ஆசிய விளையாட்டுப்போட்டியில், துடுப்பு படகு ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியா வெண்கலப் பதக்கம் வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

---------------

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில், மத்திய அமைச்சர்கள் பங்கேற்கும் இரண்டு நாள் சிந்தனை அமர்வு கூட்டம் நேற்று தொடங்கியது.

புதுதில்லியில் நடைபெறும் இக்கூட்டத்தில் நேற்று பல்வேறு மத்திய அமைச்சகங்கள் சார்பில், தங்களது முன்முயற்சிகள் மற்றும் எதிர்கால திட்டங்கள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

இன்று நடைபெறும் நிகழ்வில் அரசு மேற்கொள்ளும் பணிகள் குறித்து பிரதமர் ஆய்வு செய்ய உள்ளதாக அதிகார வட்டாரங்களை மேற்கொள்காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

இக்கூட்டத்தில், எதிர்கால திட்டங்கள் குறித்து விவாதிக்கப்படுவதுடன் நிர்வாகத்தின் முக்கிய முன்னுரிமை குறித்து கண்டறியப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பல்வேறு அமைச்சகங்கள் சார்பில் நடைபெற்றுவரும் பணிகளை மதிப்பீடு செய்தல், அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை திட்டமிடுதல் குறித்து ஆலோசித்தல் போன்றவை இக்கூட்டத்தில் இடம்பெற உள்ளது.

அதிக அளவில் ஒருங்கிணைப்பு தேவைப்படும் துறைகள் குறித்து கண்டறிவது குறித்தும் விவாதிக்கப்படுகிறது.

நிர்வாகம் மற்றும் செயல்பாட்டை மறு ஆய்வு செய்வதற்கான முக்கியத் தளமாக இந்த சிந்தனை அமர்வு கூட்டம் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---------------

*வாடிக்கையாளர்களின் வசதிக்காக வரும் 27-ம் தேதி ஞாயிறு அன்று வங்கிகள் செயல்படும் என்று மத்திய நிதியமைச்சகம் அறிவித்துள்ளது.*

*இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், ஒருங்கிணைந்த வங்கி சங்கங்கள் கூட்டமைப்பு அறிவித்துள்ள, மூன்று நாள் வேலைநிறுத்தம், வார இறுதி விடுமுறை நாட்களான 26, 27 ஆகிய தேதிகளுடன் தொடர்ந்து வருவதை கருத்தில் கொண்டு, வங்கி சேவைகள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதையடுத்து, அனைத்து பொதுத்துறை வங்கிகளும், மண்டல கிராமப்புற வங்கிகளும் வரும் ஞாயிற்றுக்கிழமை அன்று செயல்படும் என்று கூறப்பட்டுள்ளது.*

*அத்துடன், அனைத்து வங்கி கிளைகள், ஏடிஎம் கிளைகள் ஆகியவை முழுமையாக செயல்பட ரிசர்வ் வங்கி அனுமதி அளித்துள்ளதாக மத்திய நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

---------------

*சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்ட மக்கள் நலன் சார்ந்த திட்டஙகள், உள்கட்டமைப்பு வசதிகள், கல்வி, மருத்துவம் மற்றும் சமூக நலன் சார்ந்த உறுதிமொழிகளை விரைந்து செயல்படுத்த வேண்டும் என்று சட்டப்பேரவை தலைவர் திரு. ஜே சி டி பிரபாகர் அறிவுறுத்தியுள்ளார்.*

*சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் நடைபெற்ற அரசு உறுதிமொழி குழுவின் முதல் கூட்டத்தை தொடங்கி வைத்து அவர் உரையாற்றினார்.*

*சட்டப்பேரவையில் அளிக்கப்பட்ட உறுதிமொழிகள் உரிய கால வரம்பிற்குள் செயல்படுத்தப்படுகிறதா என்பது குறித்து, அரசு உறுதிமொழி குழு கண்காணிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.*

*சட்டப்பேரவைக்கும், அரசு நிர்வாகத்திற்கும் இடையே ஒரு பாலமாக அரசு உறுதிமொழி குழு செயல்பட வேண்டும் என்று திரு. ஜே சி டி பிரபாகர் கேட்டுக்கொண்டார்.*

---------------

*உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சகம் சார்பாக சட்டப்பேரவையில், தாம் வெளியிட்ட அறிவிப்புகளை உரிய காலத்திற்குள் செயல்படுத்துமாறு துறை அலுவலர்களுக்கு அமைச்சர் திரு. வெங்கடரமணன் அறிவுறுத்தியுள்ளார்.*

*சென்னை கிண்டியில், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் செயல்பாடு, செயல்திறன் மற்றும் சட்டப்பேரைவையின் அறிவிப்பு செயலாக்கம் குறித்து நடைபெற்ற ஆய்வு கூட்டத்தின் போது அவர் இதனை தெரிவித்தார்.*

*சட்டப்பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளை செயல்படுத்துவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், நிறைவேற்றப்பட்ட பணிகள், நிலுவை பணிகளை விரைந்து செயல்படுத்துவது குறித்தும் திரு. வெங்கடரமணன் அலுவலர்களுடன் விவாதித்தார்.*

---------------

பொங்கல் திருநாளில் வேட்டி, சேலை வழங்குதல், தீபாவளி பண்டிகைக்கு முதியோர் ஓய்வூதிய திட்டப் பயனாளிகளுக்கு வேட்டி, சேலை வழங்குதல் தொடர்பான நடவடிக்கைகள் குறித்து, மாநில கைத்தறித்துறை அமைச்சர் திரு. விஜய் பாலாஜி நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை தலைமை செயலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில், நூல் கொள்முதல், வேட்டி, சேலைகள் உற்பத்தி நடவடிக்கைகள் முன்னேற்றம் குறித்து விரிவாக ஆய்வு செய்தார்.

குறித்த காலத்திற்குள் உற்பத்தியை நிறைவு செய்ய கூடுதல் தறிகளை இயக்கவும், அவர் அறிவுறுத்தினார்.

டிசம்பர் மாதத்திற்குள் உற்பத்தி மற்றும் கொள்முதல் பணிகளை நிறைவு செய்து பொங்கல் பண்டிகைக்கு முன்னதாக பயனாளிகளுக்கு வேட்டி, சேலை விநியோகம் செய்யும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு திரு. விஜய் பாலாஜி அதிகாரிகளை கேட்டுக்கொண்டார்.

---------------

உத்தரப்பிரதேசத்தில் மழலையர் கல்வி முதல் முதுநிலை கல்வி வரை என்ற திட்டத்தின் கீழ் மாநில பல்கலைக்கழகங்கள் கிராமங்களை தத்தெடுத்து வருவதாக அம்மாநில ஆளுநர் திருமதி. ஆனந்தி பென் பட்டேல் கூறியுள்ளார்.

லக்னோவில் தம்மை சந்தித்த தமிழக ஊடக குழுவினருடன் உரையாடிய அவர், பல்கலைக்கழகங்களின் தரத்தை மேம்படுத்துவதற்கான அரசின் முயற்சிகள் குறித்து விளக்கினார்.

சுகாதாரம், குழந்தைகள் நலத்திட்டங்கள் குறித்து எடுத்துரைத்த ஆளுநர் 9 வயது முதல் 14 வயது வரையிலான சிறுமிகளுக்கு கருப்பைவாய் புற்றுநோய் தடுப்பூசி செலுத்தும் பணிகள், அங்கன்வாடி மையங்களை நவீனமயமாக்குதல் ஆகியவை குறித்து குறிப்பிட்டார்.

அரசு திட்டங்களை ஆய்வு செய்யவும், மகளிர் சுய உதவி குழுக்கள், வேளாண் உற்பத்தியாளர் அமைப்புகள் ஆகியவற்றின் வளர்ச்சியை ஊக்குவிக்கவும் மாவட்டங்கள் தோறும் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதாக ஆளுநர் தெரிவித்தார்.

சீர்த்திருத்த இல்லங்களில் உள்ள மகளிர் மற்றும் குழந்தைகளின் நலனில் சிறப்பு கவனம் செலுத்தப்படுவதாக உத்தரப்பிரதேச ஆளுநர் குறிப்பிட்டார்.

---------------

தமிழகத்தில் சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், ராணிப்பேட்டை மற்றும் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களின் ஒரிரு இடங்களில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும் மாலை அல்லது இரவு நேரங்களில் நகரின் ஒருசில பகுதிகளில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

--------------

ஒமன் கடற்பகுதியில், இந்திய மாலுமிகள் பயணித்த வர்த்தக கப்பல் மீது தாக்குதல் நடத்தப்பட்டதற்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

--------------

*பங்களாதேஷில் இருந்து கடத்தி வரப்பட்ட 12 கிலோ தங்கத்தை எல்லைப் பாதுகாப்பு படையினருடன் இணைந்து வருவாய் புலனாய்வு இயக்குநரகம் பறிமுதல் செய்துள்ளது.*

---------------

*தெலங்கானா அரசின் கோரிக்கையை ஏற்று, கர்நாடகாவிலிருந்து ஜூராளா பகுதியின் வேளாண் பணிக்காக தண்ணீர் விடுவிக்க கர்நாடகா முதலமைச்சர் திரு. டி கே சிவக்குமார் உத்தரவிட்டுள்ளார்.*

---------------

*மகாராஷ்டிரா மாநிலம் மராத்வாடாவில் குறைவான மழை பொழிவால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உரிய உதவிகள் வழங்கப்படும் என்ற அம்மாநில முதலமைச்சர் திரு.தேவேந்திர பட்நாவிஸ் உறுதி அளித்துள்ளார்.*

---------------

*திருவள்ளூர் மாவட்டம் சோழவரம், புழல் பகுதிகளில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆட்சியர் திருமதி கவிதா ஆய்வு செய்தார்.*

---------------

*அரச்கோணம் நகராட்சி அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு காவல்துறையினர் நடத்திய சோதனையில், 5 அலுவலர்கள் 7 லட்சத்து 34 ஆயிரம் ரூபாய் லஞ்சம் பெற்றது கண்டறியப்பட்டுள்ளது.*

---------------

*தென்காசி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், பள்ளி கல்வித்துறை சார்பில், உயர்கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி ஆட்சியர் திரு ரஞ்சித் சிங் தலைமையில் நடைபெற்றது.*

---------------

*திருப்பத்தூர் மாவட்டம் கே.பந்தாரப்பள்ளி ஊராட்சியில், 5 லட்சத்து 74 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திரு நல்லசிவன் பயனாளிகளுக்கு வழங்கினார்.*

---------------

*கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனஹள்ளியில் இருசக்கர வாகனம் மீது லாரி மோதிய விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர்.*

---------------

*தாம்பரத்திலிருந்து போத்தனூருக்கு நாளை இரவு 11 மணிக்கு சிறப்பு ரயில் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.*

---------------

*ஆசிய விளையாட்டுப்போட்டியில், படகு துடுப்பு ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியா வெண்கலப் பதக்கம் வென்றது.*

*ஜப்பானில் நடைபெற்று வரும் இப்போட்டியில் சத்னம், சல்மான் ஆகியோரை கொண்ட குழு இப்பதக்கத்தை கைப்பற்றியது.*

------------

*செஸ் ஒலிம்பியாட் போட்டியின், 7-வது சுற்றில் இந்தியா வெற்றி பெற்றது.*

*உஸ்பெகிஸ்தானின் சமர்கண்ட்டில் நடைபெற்று வரும் இப்போட்டியில், ஓபன் பிரிவில் இந்தியா இங்கிலாந்தை வென்றது.*

*பிரக்யானந்தா, குகேஷ் ஆகியோர் தங்களது ஆட்டங்களில் வெற்றி பெற்றனர்.*

*அர்ஜுன் எரிகேசி பங்கேற்றப் போட்டி டிராவில் முடிவடைந்தது.*

*மகளிர் பிரிவில் இந்தியா ஜெர்மனியை வென்றது.*

*கொனேரு ஹம்பி, சவிதா, திவ்யா தேஷ்முக் ஆகியோர் தங்களது ஆட்டங்களில் வெற்றி பெற்றனர்.*

*வைஷாலி பங்கேற்ற போட்டி டிராவில் முடிவடைந்தது.*

*<<<<<END>>>>>*